DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | |
|---|---|---|
| DVA - 04/2016 | Crime No.: | Station : |
| RW : 1 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | சுந்தரவடிவேல்(1-ம் எதிர்மனுதாரர்) | Caste | |
| Father's Name | சுப்பன் | Calling | சவரத்தொழில் |
| Village | குள்ளம்பாளையம் | Religion | |
| Taluk | | Age | 54 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 15.12.2023 |

முதல் விசாரணை:

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் புகார்தாரர். புகார்தாரர் தரப்பு சாட்சி 1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். பிராமாண பத்திரிக்கையிலுள்ள விபரங்களை எனது வழக்குரைஞர் எனக்குப் படித்துக் காண்பித்தார். சரியாக இருந்தது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி பிரமாண பத்திரிகைக்கையை எனது சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். மேற்படி பிராமண பத்திரிக்கையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன். மனுதாரர் குள்ளம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் வைத்திருந்த வங்கிக் கணக்குப் புத்தகம் அசல் **எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மனுதாரரும் எனது மகள் மோகனா என்பவர் பெயரில் உள்ள கோபி INDIAN OVERSEAS வங்கியிலுள்ள வங்கிக் கணக்குப் புத்தகம் அசல் **எ.ம.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 1-ம் எதிர்மனுதாரர் தன்னுடைய மனைவியான மனுதாரரை தன்னுடன் சேர்த்து வைக்கக்கோரி கோபி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட 31.01.2009-ம் தேதியிட்ட மனுவிற்கான மனு ஏற்பு ரசீது **எ.ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.